DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI.

# MCOP. No. 209/2022

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ரவிந்த் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | திரு.தங்கராஜ் | தொழில் | : | எலெக்ட்ரிசன் |
| கிராமம் | : | அல்லிநகரம் | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.10.2024.

(சாட்சி அழைக்கபட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டார்)
சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்

**3 வது எ.ம.கு.வி.:**

| | | |
|---|---|---|
| கேள்வி | : | உங்கள் தந்தை மரணம் அடையும் போது அவருக்கு வயது என்ன? |
| பதில் | : | 72 ஆண்டுகள். |
| கேள்வி | : | உங்கள் தந்தை வருமானம் ஈட்டியதற்காக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | உங்கள் தந்தை T.N.60 X 2107 என்ற வாகனத்தை இயக்கும் போது விபத்து ஏற்பட்டது என்றால் ? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | உங்கள் தந்தை இயக்கிய வாகனத்திற்கு பின்னால் சம்பவம் சமயத்தில் நாகையா மற்றும் வேலுச்சாமி ஆகியோர்கள் பின்னால் அமர்ந்து சென்றார்கள் என்றால் ? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | இரண்டு பேர் செல்லக்கூடிய வாகனத்தில் மூன்று பேர்கள் அனுமதி மீறி சென்றதால் நிலைதடுமாறி உங்கள் அப்பாவின் கவனக்குறைவால் விபத்து |

| | | |
|---|---|---|
| | | ஏற்பட்டது என்றால்? |
| பதில் | : | எனக்கு தெரியாது. |
| கேள்வி | : | உங்கள் தந்தையின் ஓட்டுநர் உரிமைத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | ம.த.சா.ஆ. 10 மற்றும் 11 அதில் உங்கள் தந்தைக்கு ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகன காப்பீடு இல்லை என்பதால் வாகனத்தை பறிமுதல் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | வழக்கில் சொல்லப்பட்ட ஆம்புலன்ஸிற்கு வழக்கில் சொல்லப்பட்ட ஆவணங்கள் எல்லாம் சரியாக உள்ளது என்றால் ? |
| பதில் | : | எனக்கு தெரியாது. |
| கேள்வி | : | விபத்து நடந்த இடம் கம்பம் to தேனி நான்கு வழிச்சாலை என்றால் ? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | சம்பவம் நடந்த இடத்தில் சாலை மைய தடுப்பான் உள்ளது என்றால் ? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | உங்கள் அப்பா கிழக்கில் இருந்து மேற்காக தேனி செல்லும் பாதையில் வடக்கு நோக்கி செல்லும் போது விபத்து நடந்தது என்றால் ? |
| பதில் | : | சரிதான் |
| கேள்வி | : | தெற்கு பக்கம் கவனிக்காமல் வடக்கே திரும்பியதால்தான் அப்பொழுது வந்த அவரச ஊர்தி மேல் உங்கள் தந்தை மோதிவிட்டார் என்றாலும் விபத்திற்கு முழுகாரணம் உங்கள் தந்தையின் கவனக்குறைவு என்றாலும்? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | இந்த வழக்கில் குற்றப்பத்திரிக்கையில் உங்கள் தந்தைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | உங்கள் தந்தை இறந்ததால் குற்றச்சாட்டு முற்று பெற்றுவிட்டது என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | உங்கள் தந்தையின் பின்னால் அமர்ந்து சென்ற இருநபர்கள் கொடுத்த போலீஸ் வாக்குமூலங்கள்படி வழக்கு முடிக்கப்பட்டுள்ளது என்றால்? |
| பதில் | : | எனக்கு தெரியாது. |
| கேள்வி | : | நீங்கள் குற்ற வழக்கு முடிக்கப்பட்டதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால்? |
| பதில் | : | சரிதான். |

| | | |
|---|---|---|
| கேள்வி | : | நீங்கள் பல்வேறு தலைப்புகளின் கேட்ட இழப்பீடுகள் சம்பந்தமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அவை அனைத்து வழக்கிற்காக வேண்டுமென்றே மிகைப்படுத்தி கேட்கபட்டுள்ளது என்றாலும் ? |
| பதில் | : | சரியல்ல |
| கேள்வி | : | இந்த மனு 3 வது எதிர் மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் ? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | அவசர ஊர்தி என்றால் என்ன? |
| பதில் | : | வேகமாக மருத்துவமனைக்கு செல்லக்கூடிய வாகனம். |
| கேள்வி | : | ஒரு அவசர ஊர்தி வருகிறது என்றால் உங்களுக்கு எப்படி தெரியும் என்றால்? |
| பதில் | : | ஒலி எழுப்பானுடன் 500 மீட்டருக்கு அப்பால் இருந்தே கேட்டுவிடும். |
| கேள்வி | : | அவசர ஊர்தி ஒலிப்பானுக்கும் மற்ற ஊர்தி ஒலிப்பானுக்கும் சரியாக வித்தியாசம் தெரிந்துவிடும் என்றால்? |
| பதில் | : | தெரியும். |
| கேள்வி | : | நீங்கள் பொதுவாக ஒரு சாலையில் வாகனத்தில் செல்லும்போது ஒரு அவசர ஊர்தி ஒலிப்பானுடன் வந்தால் என்ன செய்வீர்கள்? |
| பதில் | : | ஓரமாக ஒதுங்கி நிற்கவேண்டும். |
| கேள்வி | : | ஓரமாக எதுக்கு ஒதுங்கி நிற்க வேண்டும் ? |
| பதில் | : | ஆம்புலன்ஸிற்கு வழிவிடுவதற்காக. இந்த வழக்கில் ஆம்புலன்ஸ்தான் என் தந்தையின் வாகனத்தில் மோதியது. |

மறுவிசாரணை – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 24.10.2024 அன்று வியாழன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

Sd.Thiru.S.Gopinathan
கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
24.10.2024..